ஸ்ரீ:

கானவித்யா ப்ரகாசினி

இனிய தமிழ் மாதப் பத்திரிகை.

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக்கண்டார் — பாரதி.

மலர் 1. ஜூன் –1932. இதழ் 9.

பெண்களின் உரிமைகள்.

மங்கையராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவஞ்செய்திட வேண்டுமம்மா
பங்கயக்கைநலம் பார்த்தலவோ—இந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா. 1

அல்லும்பகலும் உழைப்பவரார்? உள்ளத்
தன்பு ததும்பி யெழுபவரார்?
கல்லும்கனியக் கசிந்துருகித்—தெய்வ
கற்பனைவேண்டித் தொழுபவரார்? 2

ஊக்கமுடைந்தழு மேழைகளைக்—காணில்
உள்ளமுருகித் துடிப்பவரார்?
காக்கவே நோயாளி யண்டையிலே—இரு
கண்ணிமைகொட்டா திருப்பவரார்? 3

சிந்தியகண்ணீர் துடைப்பவரார்? பயம்
சிந்தையகன்றிடச் செய்பவரார்?
முந்துகவலை பறந்திடவே—ஒரு
முத்தமளிக்க வருபவரார்? 4

உள்ளந்தளர்வுறும் நேரத்திலே—உயிர்
ஊட்டும் உரைகள் உரைப்பவரார்?
அள்ளியெடுத்து மடியிருத்தி—மக்கள்
அன்பைப்பெருக்கி வளர்ப்பவரார்? 5

நீதியறந்தலை யரும்பவே—நல்ல
நேர்வழி வந்திடச் செய்பவரார்?
ஒதியமான மிழந்தவரை—உயர்
உத்தமராக்க முயல்பவரார்? 6

ஆவிபிரியுமவ் வேளையிலே—பக்கத்
தன்போடகலா திருப்பவரார்?
பாவியமனும் வருத்திடாமல்—ஈசன்
பாதம் நினைந்திடச் செய்பவரார்? 7

ஏங்கிப் புருஷனைத் தேடியழும்—அந்த
ஏழைக்கிதஞ்சொல்லி வாழ்பவரார்?
தாங்கியதந்தை யிழந்தவரை—தினம்
சந்தோஷமூட்டி வளர்ப்பவரார்? 8

சின்னஞ்சிறிய வயதினிலே—ஈசன்
சேவடிக் கன்பெழச் செய்பவரார்?
உன்னுமிளமைப் பருவமெலாம்—களிப்
புள்ளம்பெருகிடச் செய்பவரார்? 9

மண்ணகவாழ்வினை விட்டெழுந்து—மனம்
மாசிலாமாணிக்கமா யொளிர்ந்து
விண்ணகவாழ்வை விரும்பிடவே—நிதம்
வேண்டிய போதனை செய்பவரார்? 10

அன்பினுக்காகவே வாழ்பவரார்? அன்பில்
ஆவியும் போக்கத் துணிபவரார்?
இன்பவுரைகள் தருபவரார்? வீட்டை
இன்னகையாலொளி செய்பவரார்? 11

இப்பெருநற் கருமங்களெல்லாம்—உமக்
கீசனளித்த உரிமைகளாம்
மெய்ப்பணிவேறு முலகிலுண்டோ? இன்னும்
வேண்டிப்பெறும் வரம் ஒன்றுளதோ? 12

மங்கையராகப் பிறந்ததினால்—மனம்
வாடித்தளர்ந்து வருந்துவதேன்?
தங்குபுவியில் வளர்ந்திடும்—கற்பக
தாருவாய் நிற்பதும் நீரலவோ? 13

செம்மையிற்பெற்ற குணங்களெலாம்—நீங்கள்
செய்வினையாலே திருத்துவீரேல்
இம்மைக்கடன்கள் முடிந்திடவே—மோக்ஷம்
எய்திச்சுகமா யிருப்பீரே.

—தேசிகவிநாயகன்.

கடவுள் உண்மை,

பி. ஸ்ரீ. ஆச்சாரியா

கொலம்பியா கிராமபோன் கம்பெனியார் தங்கள் பிளேட்டில், காந்தியடிகள் "கடவுள் உண்மை" யைக் குறித்துச் செய்த சொற்பொழிவு ஒன்றை அமைத்து வைத்திருக்கிறார்கள். அச் சொற்பொழிவு, அடிக்கடி மாறக்கூடிய அரசியல் விஷயத்தைக் குறிக்கும் சொற்பொழிவுகளைக் காட்டிலும் முக்கியமானது என்பதில் ஐயமில்லை.

இவ்வுலகம், கோனில்லாத மங்கை, சாட்டையில்லாத பம்பரம், என்று நாஸ்திகர்கள் சித்தாந்தம் செய்கிறார்கள் பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியில், விஞ்ஞான சாஸ்திரம் அதாவது ஸயன்ஸ்,- நாஸ்திகக் கொள்கைக்கு ஒருவாறு ஆதரவளித்தது. வான சாஸ்திரி வானத்தில் பலவேறு நட்சத்திரங்களை, கிரகங்களை உலகங்களைக் கண்டான். கடவுளுலகத்தையாவது கடவுளையாவது காணவில்லை. பூமி சாஸ்திரி பூமியில் கடவுள் இல்லையென்றான். இவ்விதமாகவே உடல் நூலாரும், மனிதஉடம்பில் கொழுப்பு இவ்வளவு கரி இவ்வளவு, இரும்பு இவ்வளவு, கந்தகம் இவ்வளவு, சுண்ணாம்பு இவ்வளவு, 'பாஸ்பரஸ்' இவ்வளவு, தண்ணீர் இவ்வளவுஎன்று கணக்கிட்டிருக்கிறார்கள்; ஆனால் அவ்வுடம்பில் கடவுளையாவது கடவுளின் சக்தியையாவது கண்டாரில்லை.

ஆனால் தற்காலத்திலுள்ள விஞ்ஞான சாஸ்திரிகளில் பிரபலராயுள்ளார், "நம்மால் பார்க்க முடியாததும் வருணிக்க முடியாததுமான ஓர் அற்புத சக்தி உலகம் முழுமையும் வியாபித்திருக்கிறது" என்ற காந்தியடிகளின் கூற்றை ஒப்புக்கொள்கிறார்கள் என்னலாம். கடவுள் என்ற மகா சக்தி கண் முதலிய புலன்களுக்கு எட்டாதது; ஆனால் அத் தெய்வீக சக்தியை நாம் உணரலாம். நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

விஞ்ஞான விஷயங்களை ஆராய்ச்சிவாயிலாக மெய்ப்பித்துக் காட்டுவதுபோல், கடவுளை மெய்ப்பித்தல் இயலாதகாரியம். ஆனால் உலகமெங்கும் சட்டமும் ஒழுங்கும் நிலவியிருக்கின்றன என்பதை விஞ்ஞான சாஸ்திரிகள் அறிந்திருக்கிறார்கள். இதனால் உலகம் அராஜகமாகக்கிடக்கவில்லை யென்று ஊகிக்கலாம். சூட்சுமமான அரசாங்கம் ஒன்று இவ்வுலகத்தை ஆண்டுவருகிறது என்பதை இந் நாளில் விஞ்ஞான சாஸ்திரம் ஒருவாறு உணர்ந்துவருகிறது.

இந்த இயற்கை அரசாங்கத்தை நாம் மறக்கலாம், ஆனால் மறுக்கமுடியாது. இவ் அரசாட்சியை அமைதியாக நம்பிக்கையோடு ஏற்றுக்கொண்டு பணிவாக நடப்போர் வாழ்க்கையில் திருப்தியும் மெய்யின்பமும் பெறுவர். "என்னைச் சுற்றியுமுள்ள சகல விஷயங் களும் நாளுக்கு நாள் மாறி வருகின்றன. அழிந்தும் வருகின்றன. இவ்வாறு எல்லாப் பொருள்களிலும் மாறுதல் ஏற்படுவதற்கு மாறு தல் அற்ற ஓர் நிரந்தர சக்தி காரணமாகும். இச் சக்தியே கடவுள். எனது புலன்களால் நான் உணரக்கூடிய சக்தி ஒன்றும் நிலைபெற் றிருப்பதில்லை. ஆனால் கடவுள் ஒருவரே நிலைபெற்றிருக்கிறார்." இவ்வாறு காந்தியடிகள் கூறியுள்ளார்.

இக்கொள்கை இன்று விசேஷமாக இந்திய விஞ்ஞான சாஸ் திரி ஸர் ஜகதீச சந்திரவசுவின் ஆராய்ச்சிகளால் ஆதரிக்கப்படுகின் றது. ஜடப்பொருள்களிலும் உயிர் இருக்கிறது என்ற ஆச்சரிய மான உண்மை நமது ஜகதீச சந்திரரின் ஆராய்ச்சிவாயிலாக மேல் நாடுகளிலும் இன்று வெளியிடப் பெறுகின்றது. இவ்வுண்மை, உலக மெல்லாம் ஒருயிராகத்தழுவி நிற்கும் கடவுளுண்மையை நினைப்பூட்டுகின்றதென்னலாம். தெய்வீக உண்மையை அறிந்து கொள்ள அசைவற்ற திடநம்பிக்கை இன்றியமையாதது என்பதும் ஜகதீச சந்திரரின் அபிப்பிராயம்.

இத்தகைய நம்பிக்கை மூட நம்பிக்கை அன்று. இது அறி வுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமான நம்பிக்கையேயாகும். உல கமெல்லாம் ஒருயிராக நிறைந்திருக்கும் கடவுளை நல்லறிஞர் தம் உள் ளத்தில் காண முயல்வர். அதாவது உணர்ந்து இன்புறுவர். இக் கடவுள் மீது கொள்ளும் நம்பிக்கை, பக்தியாகக் கனிவெய்துகின் றது. இத்தகைய பக்தி மூடபக்தியன்று, ஞானபக்தியே. ஞான பக்தி உத்தம சன்மார்க்க வாழ்விற்கு ஒரு பெருந்தூண்டுகோலாகும்

பகுத்தறிவு செல்லாத பிரதேசங்களிலும் ஞான பக்தி பாய்ந்து செல்லுகிறது. உத்தம ஞான பக்தன் தன் உள்ளொளி (Intuition) யின் பயனாகப் பகுத்தறிவிற்கும் அப்பாலுள்ள சூட்சும விஷயங்களை ஒருவாறு காண்கின்றான் அல்லது உணர்கின்றான். இத்தகைய பக்தர்களை நாம்பல நாடுகளிலும் காண்கிறோம். பலவேறு சமயங்களிலும் காண்கிறோம். இவர்களின் பக்தியனுபவங்களெல்லாம் சாராம்சத்தில் தம்முள் ஒத்திருக்கின்றன. இவ் அனுபவங்களை மறுப்பது நம்மையே நாம் மறுப்பதற்கு ஒப்பாகுமென்று காந்தியடிகள் கூறுகிறார்.

இவ் அனுபவவங்களின் சாராம்சம் என்ன? கடவுள் என்ற மகா சக்தி மாசற்ற மெய்யழகோடு விளங்குகிறது. கடவுள் அறிவுக் கடவுளாயிருப்பதோடு, அன்புக்கடவுளாயுமிருக்கிறார். கடவுள் அருளினாலே, மரணத்திற்கு இடையே உயிர் நிலைபெறுகின்றது. பொய்களின் இடையே, மெய் விளங்குகிறது. இருளின் இடையே ஒளி ஓங்குகிறது. எனவே, கடவுளிடம் உயிர், உண்மை, ஒளி என்ற மூன்றும் அடங்கியுள்ளன. அற்பமான காரியங்களிலும் கடவுள் அருள் ததும்புகின்றது. ஐம்புலன்களுக்கு அதீதமான தெய்விக உணர்விலேயே கடவுளுண்மை நன்கு விளங்குவதாகும்.

இவ்விஷயங்கள் காந்தியடிகளின் அனுபவத்தாலும் ஆதரிக்கப்படுகின்றன. "எனது நம்பிக்கை இமயமலைபோலாகி, அதன் சிகரங்களிலுள்ள பனிக்கட்டிகளைப்போல் எனது மனமும் பரிசுத்தமாகும்போது, எவ்வளவு தூரம் கடவுளுக்கு அருகில் இருப்பேன்!" என்பது அடிகளின் கூற்று.

இவ்விதமாக, மகாத்மா காந்தி கூறுவது சர்வசமய சமரஸ சன்மார்க்கமாகக் கருததக்கது. இம் மகா புருஷனது அனுபவ ஞானம் தற்கால உலகத்தை வாட்டும் நாஸ்திக நோய்க்கு ஓர் அரு மருந்தாகும்.

மனிதனிற் கடவுள்

(சுத்தானந்த பாரதி.)

(முன் 314-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

அப்பொழுதே,

உறவுந் துணையும் ஒளியாம் உன் ஆன்மா
பிரிந்தவையாய்ப் போன்றும் பிற.

என்னும் உண்மை நிலவும். அந்தத் தெய்வ ஒளிதனையே தேட்வே மற்றதை யெல்லாம் நீப்பது வாழ்வின் இறுதி நோக்கம். அதுவேமுக்தி. முத்தின் மதிப்பை அறிந்த அரசன் தன் அரசை முழுதும் விற்றேனும் அதை வாங்கின பைபிள் கதைபோல் முக்தி யின் மாண்பையறிந்தோன், தன் எல்லாவற்றையும் அதற்காக விட்டு விடுவான் என்பதில் தடையில்லை. இந்த தியாகமே மனிதனிடம் வேண்டற்பாலது. மனிதன் கடவுளளவு பெருகுவதே வாழ்வின் நோக்கம்.

அன்பர்காள், உலகில் தற்போது பணிகள் மல்கியிருக்கின் றன. தன்னயமற்ற பூரணயோகசித்தர்களை பாரததேவி கூவி யழைத்துத் தனியேயிருக்கிறாள். வறுமையும், மடமையும், அடி மைத்தனமும், போலி நாகரிகமும், போரும், எளியோனை வலியோன் நசுக்குந் தீமையும், கள்ளுங் களவும் காமமும், கொலையும், கற்பழித் தலும், உலகின் அறத்தைப் பிழைத்து வெறியாட்டமாடுகின்றன. இவற்றோடு நாமே போர்புரிய வேண்டும். அதற்கு முதலில் நம் மைத் தூயராக்கிக்கொள்ளவேண்டும். அன்பும், அருளும், மெய் யறமும், ஆண்மையும், சமரஸமும், இன்பமும் நமது மனத்தில் நிறைந்து மனத்தைத் தூய்மைப்படுத்தவேண்டும். அடிமைப்படாது நமது கைகால்களை உபயோகித்து நமது உடல் தேவைகளை நிரப்பும்

வாயிலாக வாழ்வை விசாலமாக்கி உண்மையான தன்னயமற்ற பணியில் உழைத்து உட்புறச் சுத்தம் பெறவேண்டும். சிறுமையும், பொறுமையும், வஞ்சகமும் அற்று, சத்தியமாயுள்ள வீரவுரை நமது வாயைத் தூய்மையாக்கவேண்டும். இப்படி நம்மைத் தூய்மைப் படுத்தி, சுதந்திரப்படுத்திக்கொண்டு யோகசித்திபெற்று அந்த சக்தியால் அந்நிலைக்கு உலகையுங் கொண்டுவர அருட்பணி செய்வதே வாழ்வின் நோக்கம்.

நமது வாழ்வின் உயர்விற்கு நாமே பொறுப்பாளி. நமது திண்ணிய கருத்தே, ஆன்மாவே நமக்குத் தோழன். அதுவே நமது பந்து! ஆக்மாவை அறிந்து தன்னை அடக்கி வென்றவனுக்கு ஆக்மாவே தோழன். தன்னை வெல்லாதவனுக்கு அதுவே சத்துரு. தன்னைக் கீழியல்பில் ஆழ்த்தாது ஈசனுடைய கையில் ஒப்புவித்தலே வாழ்வின் நோக்கம். நாம் நம்மை ஈசனின் பங்கென்று அறிய வேண்டும்; ஒரு சீரிய வினைக்காகவே நாம் உடலெடுத்தோம் என்று அறியவேண்டும். அவ்வினை செய்வதினாலேயே வாழ்வைச் செலுத்தி நாம் நாமாக வேண்டுமென்பதை நமது முயற்சியின் முன்வைத்துக் கொள்ளவேண்டும். கடவுள் எங்கும் நிலவும் கோயிலென உலகை மதித்து, வணக்கமுடன் அதன் பணிசெய்யவேண்டும். முடிவில் வினை வேலியைத்தாண்டி நமது தேவைகளை யெல்லாம் தேய்த்து நம்முள் மீதியிருப்பது கடவுளேயாகச் செய்துகொள்ளவேண்டும். இதுவே வாழ்வின் நோக்கம். இந்நிலையை யடையத் தன்னம்பிக்கையுடன் எழுவோமாக.

நம்பு, நினைமுயல் நாடோருமை ஞானமாம்
இன்பம் பெருகும் இனிது.

சிறுவர் உலகம்.

S. D. P.

சேவற்கோழி

கோழி! கோழி! வா வா
கொக்கோகோ என்று வா
கோழி! ஓடி வா வா
கொண்டைப் பூவைக்காட்டுவா 1

குத்திச்சண்டை செய்யவோ
குப்பைகிண்டி மேயவோ
கத்திபோலுன் கால்விரல்
கடவுள் தந்து விட்டனர். 2

காலைகூவி எங்களைக்
கட்டில்விட்டெழுப்புவாய்
வேலைசெய்ய ஏவுவாய்
வெற்றிகொண்ட கோழியே 3

பெட்டைக் கோழி.

கோழி! கோழி! வா வா
கூரைவிட் டிறங்கிவா
கோழி! முட்டையிடவா
கூட்டி லடைகாக்கவா 1

பெட்டைக்கோழி! வா வா
பிள்ளைகளைக் கூட்டிவா
குட்டை நெல்லைக் கொட்டினேன்
கொத்திக்கொத்தித் தின்னவா 2

வஞ்சமாய்ப் பருந்ததோ
வானில்வட்டம் போடுது
குஞ்சணைத் தூக்காப்பாயோ
கூட்டில்கொண்டு சேர்ப்பாயோ 3

உயர்ந்தோர் உள்ளம்.

1. என் தந்தையிடமிருந்து அடக்கமும் ஆண்மையும் அறிந்தேன். என் தாயிடமிருந்து பக்தியும், பரோபகாரமும், கெட்ட செயல்களைப்போல கெட்ட எண்ணங்களும் நிகழாது காத்தல், செல்வர் வழக்கங்களைவிட்டு ஆடம்பரமற்ற வாழ்வு வாழ்தல் முதலியன கற்றேன்.

காலையில் எழுந்தவுடன் கீழ்க்கண்டபடி நினைத்துக்கொள்:—

2. இன்று நன்றி கெட்டவனை அல்லது பொறாமையுடையவனை அல்லது வஞ்சகஸ்தனை நான் சந்திக்கக்கூடும். அவர்களுக்கு இக்குணங்கள் நன்மையிது தீமையிது என்று அறியாமையால் உண்டாகின்றன ஆனால் நன்மை அழகானதென்றும், தீமை அழகில்லாதது என்றும், தீங்கிழைப்பவன் இரத்தத்தால் மட்டுமன்றி அறிவினாலும் மக்களிடமுள்ள தெய்வாம்சத்தாலும் எனக்கு உறவினன் என்றும் நான் அறிவேன். ஆகையால் ஒருவரும் எனக்குத் தீங்கிழைக்க முடியாது; நானும் என் உறவினனைக் கோபிக்கவும் முடியாது, பகைக்கவும் முடியாது.

நாம் அனைவரும் தேகத்திலுள்ள கைகள், கால்கள், கண்ணிமைகள் முதலியவைகளைப்போல ஒத்துழைக்கவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். ஒருவருக்கொருவர் விரோதமாய் நடப்பது இயற்கைக்கு விரோதம்; ஒருவரிடம் கோபப்படுதலும், அவரைவிட்டு அகலலும் ஒருவருக்கொருவர் விரோதமாய் நடப்பதேயாகும்.

3. நீ செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் அஜாக்கிரதை, அறிவு காட்டும்வழியில் வெறுப்பு, கிடைத்ததில் அதிருப்தி,வஞ்சகம் சுயநலம் முதலியவற்றை அறவே அகற்றி, அக்காரியத்தை உன் வாழ்நாளில் கடைசிக் காரியமாக பாவித்துச் செய்தால் உனக்கு யாதொரு துன்பமும் வாராது.

4. மனச்சாந்தியோடு நின்று தேவவாழ்வு வாழ்வதற்கு வேண்டிய சாதனங்கள் மிகச்சிலவே யாகும்.

5. பிறர் மனத்தகத்தே நிகழ்கின்றவற்றை அறியாமையால் துன்புறுபவரை யாம் கண்டதில்லை. ஆனால் தம் மனத்கத்தே நிகழ்கின்றவற்றை உன்னிப்பாராதவர் என்றும் இன்பம் உறுதலிலர்

6. மனிதனுக்கு நல்வாழ்விற்கு வழிகாட்டுவது எது? தத்துவ சாஸ்திரம் ஒன்றுதான். தத்துவசாஸ்திரம் என்பது மனச்சாட்சிக்கு மாறாய் நடவாமலும், இன்பதுன்பங்களால் இடருறாமலும், செய்வதை லட்சியமின்றியோ அல்லது பொய்யாயோ அல்லது வஞ்சகமாயோ செய்யாமலும், பிறர் இன்னது செய்யவேண்டும் அல்லது செய்யக்கூடாது என்று விரும்பாமலும், வருவதெல்லாம் தான் வந்தவிடத்திலிருந்தே வருவதாய் எண்ணியும், மாணத்தை பயமேதுமின்றிச் சந்தோஷத்துடனேயே ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதுமே யாகும்.

7. நாம் அறநெறிக்கு வருவதற்குக் காலம் தாழ்த்தல் ஆகாது. ஏனெனில் தினந்தோறும் நமக்கு மரணம் சமீபித்துக் கொண்டேவருகிறது, அம்மட்டோ? மரணம் வருமுன்னதாகவே, நன்மையிது தீமையிது என்றறியும் பகுத்தறிவை நாம் இழந்துவிடவும்கூடும்.

8 இயற்கையில் உண்டாகும் பொருள்களிலிருந்து உண்டாகும் மற்றப் பொருள்களும் மனதிற்கு மகிழ்ச்சி தருவனவாய் இருக்கின்றன. உதாரணமாக, ரொட்டி சுட்டால் அதன் மேற்புறமானது சுடுபவனுடைய விருப்பத்திற்கு மாறாய் வெடித்திருந்தாலும், அதில் ஒருவிதமான அழகு தோன்றுகிறது, அதைச் சாப்பிட வேண்டுமென்ற அவாவும் எழுகின்றது. அதுபோலவே வளைந்து தொங்கும் தான்யக் கதிர்களும், சிம்மத்தின் கண்ணிமைகளும், பன்றியின் வாய் நுரையும் தனித்தனியே நோக்கும்பொழுது அழகில்லாதனவாகக் காணப்பட்டாலும் அவை இயற்கையில் உண்டான பொருள்களின் விளைவேயாகையால் அழகாகவும் தோன்றுகின்றன, மனதிற்கு மகிழ்ச்சியும் தருகின்றன. அதுபோல இயற்கையும் இயற்கையின் விளைவுகளையும் உள்ளவாறு நன்குணர்ந்தவனே முதியவர்களிடமும் ஒருவித அழகு உண்டென்று அறியக்கூடும், இளையோரின் அழகையும் அவன் களங்கமற்ற இருதயத்தோடு அனுபவிக்கக்கூடும்

9. வெகு ஜனப் பிரயோஜனமான காரியங்களில் மனம் பிரவர்த்தியாத காலத்து அயலாரைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டே உன் வாழ்நாளை வீணாக்காதே. ஏனெனில் மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்று நீ நினைத்துப்பார்க்கும் நேரத்திலெல்லாம் நின்னாற் செயற்பாலனவற்றைச் செய்யாதொழிகிறாய்.

10 மனதிலே வியர்த்தமான எண்ணங்களும், கொடிய எண்ணங்களும் எழாமல் நாம் காத்துக்கொள்ளவேண்டும். யாராவது திடீரென்று "நீ இப்பொழுது என்ன எண்ணிக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டால் உடனே இன்னது என்று பயமின்றி பகிரங்கமாய்ச் சொல்லக்கூடிய விஷயங்களைப்பற்றி மட்டும் எப்பொழுதும் மனதில் எண்ணும்படி நாம் பழகவேண்டும்.

—மார்க்க ஒளரேலியஸ்.

ஜகத்குரு
நவீனானந்த சுவாமிகள்,

(தமிழ் தொண்டன்).

ஜகத்சுரு நவீனானந்த சுவாமிகளுக்குச் சொந்தமான மடமில்லை, ஆசாரிய பரம்பரையில்லை, கோயில்களின் மேற்பார்வையில்லை, நிலம் பொன் முதலிய உடைமைகள் அதிகமில்லை, விசேஷமான சிஷ்ய சம்பத்துமில்லை, அவரிடம் துறவியின் வேஷமும் இல்லை, தமிழ் நாட்டின் பல வேறு பகுதிகளில் நண்பர்களுண்டு. அவர்கள் தங்களைச் சீஷர்கள் என்று சொல்லிக் கொள்வார்கள். ஆனால் அவர் அவர்களைத் தோழர்கள் என்றே அழைப்பார்.

நவீனானந்தர் ஒருகாலத்தில்—அதாவது பூர்வாசிரமத்தில், போலீஸ் இலாகாவில் உத்தியோகம் பார்த்துவந்தார். ஹெட் கான்ஸ்டேபிலாகப் பதிவுசெய்துகொண்ட இருபது ஆண்டுகளுக்குள் அவர் டேப்டி சூபிரேண்டேண்டண்ட் பதவிக்கு உயர்த்தப்பட்டார். ஆங்கில ராஜ்யத்தின் அதிகார முத்திரை தரித்த அவர் கிராமவாசிகளான குடியானவர்களால் ஒரு நவாபாகவும், மகாராஜாவாகவும், வைசிராயாகவும் மதிக்கப்பட்டார்.

நவீனானந்தரின் பூர்வாசிரமப் பெயர் நாராயண தீட்சிதர் என்பது அவர் குடும்ப சமீபகாலம்வரையில் வேதவேள்விகளை விடாது செய்துவந்த ‘குண்டல’ தீட்சிதர்களின் குடும்பமாகும். ‘கனம் சடை’ என்று உருவேற்றும் பரமவைதிகர்குடும்பத்திலிருந்து அவர் எவ்வாறு போலீசுக்கு வந்தார்? என்பதை இங்கே சுருக்கமாகக் கூறுவோம்.

இவர் தாய் தந்தையர் பரம வைதிகர்களாகவும் பரம ஏழைகளாகவும் இருந்தார்கள். தந்தை ஒரு தனவைசியர் ஏற்படுத்தியிருந்த வேதபாடசாலையில் ஓர் உபாத்தியாயராக இருந்து தமக்குக் கிடைத்த சொற்பவரும்படியால் ‘டசன் மெம்பருள்ள’ தன் குடும்பத்தைப் பரிபாலித்துவந்தார். அப்பாட சாலையிலேயே சிறுவனை நாராயணனும்படித்து வந்தான். ஒரு நாள் வேதபாடம் நடந்து கொண்டிருக்கும்பொழுது பையன், தெருவில் கம்பீரமாக அடியிட்

டிச் சென்றுகொண்டிருந்த ஒரு போலீஸ் கான்ஸ்டேபிளைக் கவனித்துக்கொண்டிருந்ததால், பாடத்தைச் சரியாகச் சொல்லவில்லை. இதற்காக கடுஞ்சினங்கொண்ட தந்தையார் சிறுவனை நையப்புடைத்தார். அன்றிரவே அவன் வீட்டை விட்டு ஓடிப்போனான்.

வழியிலும், ரயிலிலும் சாமர்த்தியமாய்ப் பிச்சை யெடுத்துக்கொண்டே சிறுவன் சென்னைவந்து சேர்ந்தான். அங்கே ஒரு பிரபுவின் வீட்டில் வேலைக்கு அமர்ந்து வயிறு பிழைக்கத்தொடங்கினான். சிறுவனது நெஞ்சுத் துணிவையும் கம்பீரமான தோற்றத்தையும் இயற்கையறிவையும் கண்ட பிரபு தமது சிறுவரோடு அவனையும் ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்பினார். தன்னுடைய அபாரஞாபக சக்தியால் நாராயணன், பீ. ஏ முடியும்வரை, ஒவ்வொரு பரீட்சையிலும் முதல் வகுப்பில் தேறிவந்தான்.

நாராயண தீட்சிதர் பீ. ஏ, எத்தகைய உத்தியோகத்தில் அமர்வதென்று யோசித்தார். சிறுபிராயத்தில் தந்தையிடம் அடிபடுவதற்குக் காரணமாயிருந்த போலீசிலேயே சேர்ந்துகொள்ள வேண்டுமென்று முடிவு செய்தார். போலீசில் பெரிய வேலை 'காலி' யில்லாததால், 'ஹெட்கான்ஸ்டேபிள்' வேலையை ஒப்புக்கொண்டார். பீ. ஏ பரீட்சையில் முதல்தரமாகத் தேறிய தீட்சிதர் 'எட்டுவேலிக்குப் போகிறாரே' என்று அவரோடு கற்றுத்தேர்ந்த வித்தியார்த்திகள் எல்லாம் பரிகசித்தார்கள். ஆனால் தீட்சிதர், தமது பேருழைப்பினாலும், மனோதைரியத்தினாலும், 'டெப்டிசூப்ரெண்டெண்ட்' ஆகி, முன்னே தம்மை இகழ்ந்து பேசியவாது பொறாமைக்கு இலக்காகிவிட்டார்.

போலீசில் அவர் உலகத்தை நன்கறிந்துகொண்டார். இராஜபக்தியில் இணையற்றிருந்த தீட்சிதரை அரசினர் பாராட்டினர். ஜனங்களோ அவருக்கு அச்சத்தால் 'வழிபாடு' செலுத்தினார்கள். இவ்வாறிருக்கையில் சிறுவயதுள்ள ஓர் ஆங்கிலேயன் பெரிய சூப்பிரண்டெண்டாக நியமனம் பெற்றான். அவனுக்குக்கீழ் அடங்கி

வேலைபார்க்கவேண்டிய நிலைமை ஆண்டிலும் அனுபவத்திலும் மூத்திருந்த நமது நாராயண தீட்சிதருக்கு ஏற்பட்டது. எனினும் அவர், ஸ்தானத்தை உத்தேசித்து, பெரிய துரையின் 'அறியாமை'க்கும் அனுபவமின்மைக்கும்கூட, மரியாதை காட்டி வந்தார்.

ஓர் இராஜநிந்தனை வழக்கில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட ஒரு மனிதனை 'சார்ஜ்' செய்வதா, வேண்டாமா என்னும் விஷயமாக ஏற்பட்ட அபிப்பிராயபேதம், தீட்சிதருக்கும் பெரிய துரைக்குமிடையே ஒரு பெரும் பிளவை ஏற்படுத்திவிட்டது. பெரிய துரையின் அபிப்பிராயத்தையே மேல் அதிகாரிகள் ஆதரித்தார்கள். மேலும் அவர்கள் இவர்மீது சில சந்தேகங்கள்கொண்டு இவரை இன்ஸ்பெக்டர் பதவிக்குத் தாழ்த்திவிடலாமா என்றும் ஆலோசித்தார்கள். இந்நிலைமையில் தாங்கமுடியாத மனக்கடுப்போடு, நாராயண தீட்சிதர், பி. ஏ டெப்டி சூப்பிரின்டெண்ட், ஜகத்குரு நவீனானந்த சுவாமிகளாகப் பரிணமித்துவிட்டார்.

பரமவைதிகத்திலிருந்து பரமலௌகிகமான போலீசுக்கும், அதிலிருந்து பளிச்சென்று நவீன 'ஜகத்குரு'வின் ஸ்தானத்திற்கும் தாவிக்குதித்த தீட்சிதரின் தற்கால வாழ்க்கை, அதிகார ஆடம்பர வைபவமற்றதாயிருப்பினும், நந்தமிழ் நாட்டின் புது வாழ்விற்குப் பெரும் நன்மை விளைக்கத்தக்கதாயிருந்தது. இப்பொழுது அவரது இராஜபக்தி தேசபக்தியாக மாறிவிட்டது. கம்பீரமான போலீஸ் மிடுக்கும் தோற்றமும், 'ஜகத்குரு'வின் வசீகரசக்தியாக விளைந்துவிட்டன. பல நூற்றாண்டுகளாக வமிச பாரம்பரியமாய் வந்த வைதிக ஞானம், 'நவீன நாகரிக'க் கல்வியறிவோடு கலந்து, ஓர் புதிய சித்தாந்தமாக நமது தீட்சதருள்ளத்திலே கனிவெய்தியது.

புதிய 'ஜகத்குரு,' பழைய ரிஷிகளின் சம்பிரதாயங்களை அறிந்திருந்ததோடு, புதிய சுவேத ரிஷிகளான கார்லைல், எமர்ஸன் ரஸ்கின், ஆகியவர்களின் கொள்கைகளையும் நன்கறிந்திருந்தார். பழைய மகாத்மாக்களான கண்ணன், சங்கரன், புத்தன், ஆகியோ

ரது சித்தாந்தங்களோடு, புதிய மகாத்மாக்களான, டால்ஸ்டாய் காந்தி முதலானவர்களின் சித்தாந்தங்களையும் நன்குணர்ந்து கொண்டார். பழைய வேதாந்தம், புதிய 'ஸயன்ஸ்'—புதிய யந்திர சாஸ்திரம், பழைய யோக சாஸ்திரம்,—பழைய மந்திரங்கள், புதிய 'ஹினுப்டிஸ 'மெஸ்மெரிஸ்' மர்மங்கள்,—பழைய புதிய தந்திரங்கள், ஆகமங்கள், கலைஞானங்கள், கவிகள்—இவற்றை யெல்லாம் நவீனனந்தர் பட்சபாதமில்லாது ஓதியுணர்ந்து வந்தார். பண்டைப்பழைய ரிக்வேதம் முதல், புத்தப்புதிய சைவப் பஞ்சாங்கம்வரை அவர் அறிவார். பண்டைப் பெரும் பழமையில் பூத்து மலர்ந்த இந்திய ஞானம் தொடங்கிப் புதியஇந்தியாவின் போலீஸ் ஞானத்தோடு புத்தப்புதிய ஆராய்ச்சித் திறத்திலே முளைத்தெழும் இராமாயண ஆராய்ச்சிகள் வரைக்கும் அறிந்திருந்த மாஜி போலீஸ் டெப்டி சூப்ரெண்டெண்ட் நாராயாண தீட்சிதரை அவரது நண்பர்கள் நவீனனந்த சுவாமி என்னும் பட்டம் சூட்டி வழிபட்டதில் ஆச்சரிய முண்டோ?

புதிய ஜகத்குரு பீடத்தில், பழைய ஞானத்தோடு ஆராய்ச்சியும், பக்தியோடு பகுத்தறிவும், யோகத்தோடு போகமும், முயற்சியோடு நிஷ்டையும், அசையாத சாந்தத்தோடு ஆவேசமான வீரமும் கலந்து காணப்படுகின்றன. நவீன விஞ்ஞான சாஸ்திரமும் பழமையான வேதவேதாங்கங்களும் நமது நவீனனந்தருக்குப் பணிசெய்து நிற்கின்றன.

"சித்தத்திலே சிவம் நாடுவார்—இங்கு
சேர்ந்து களித்துலகாளுவார்—நல்ல
மத்தமத வெங்களிறுபோல்—நடை
வாய்ந்திறு மாந்துதிரிகுவார்"

என்று கவி கூறுவதே, ஜீவன் முக்தரது உண்மையான இலக்கணம் என்பது நவீனனந்தர் கொள்கை.

பள்ளிக்கூடமே இனி நாம் கட்டவேண்டிய திருக்கோவில்; ஆனல் கல்வி உண்மையான கல்வியாக இருக்கவேண்டும். குமாஸ்

தாக்களையும் வக்கீல்களையும், 'புற்றீசல்' போலப் பெருக்கும் கல்வி கல்வியாகுமா? 'கனம், சடை' யென்று உருவேற்றி வாழும் வாழ்கைக்கும், 'ஸயன்ஸ்' என்றும், சரித்திரம் என்றும் கண்மூடி நெட்டுருவேற்றி, பி. ஏ., எம். ஏ. பட்டங்களை நம்பி வயிறு வளர்க்க விரும்பும் வாழ்கைக்கும் அதிக வித்தியாசம் இல்லை. இவ்வாறு நவீனனந்தர் பிரசங்கிப்பார்.

மனச்சாட்சியே தெய்வம். ஆனால் உண்மையான கல்விப் பயிற்சிதான் இத்தெய்வத்திற்கு உயிர்தரும் பூஜையாகும். அறிவுப் பயிற்சியும் உடற்பயிற்சியான உழைப்புமே சரியான தெய்வவழிபாடு. இவ்வழிப் பாட்டின் பயனாக விளையும் ஒழுக்கமே, இறைவனது உண்மையான நல்லருளாகும். நெஞ்சிலே நேர்மையின்றி, அல்லும். பகலும் கடவுள் வழிபாடு செய்தாலும் அது யாதொரு நற்பயனும் நல்குவதில்லை. பக்தி ஒழுக்கமாக மலர்ந்து சமூக சேவையாகக் கனிந்தாலொழிய அது உண்மையான பக்தியாகாது.

"காவித்துணி வேண்டா,
கற்றைச்சடை வேண்டா,
பாவித்தல் போதும்
பரமநிலை எய்துதற்கே"

என்று இவ்வாறு ஜகத்குரு நவீனனந்த சுவாமிகள் தமிழ் நாட்டின் பல பிரதேசங்களில் உபதேசம் செய்து வருகிறார். பழைய வைதிக குடும்பத்தில் பிறந்த இவர் ஓர் புதிய 'வைதிக'த்தை நிலைநாட்டப் பார்க்கிறார் என்று சிலர் பேசுகிறார். சமய உலகிலும். மாஜிஸ்ட்ரேட் டிப்டி சூப்ரண்டெண்டெண்ட், போலீஸ் அதிகாரத்தைக் காட்ட வருகிறாரோ?—என்று வேறு சிலர் சந்தேகிக்கிறார்.

உ

கஜபதிசிங் அல்லது

மேனாட்டுத் துப்பறிபவன்.

K. சங்கரநாராயணன்

(344-ம் பக்கம் தொடர்ச்சி.)

"கொள்ளையா! யார்?", என்று அவன் கூவினான்.

"நீ தான்! நீ தான்! கொள்ளைக்காரன்! கொடிய திருடன்," என்று சொல்லிக்கொண்டு அவனண்டை சென்று, அவனுடைய தோளைப்பற்றி இழுத்து அங்குமிங்கும் ஆட்டினேன். "கொள்ளையொன்றும் நடக்கவில்லை. மரகதங்கள் ஒன்றாவது களவாடப்படவில்லை." என்று அவன் துணிந்துரைத்தான்.

"இதைப்பற்றிய விளையாட்டை உடனே நிறுத்து. மூன்று மரகதங்களைக்காணோம். அவைகள் எங்கு இருக்கின்றனவென்பது உனக்குத் தெரியும். உன்னைத் திருடனென்றும், பிரட்டனென்றுங் கூறுவது நியாயமே. இம்மரகதங்களைத்தவிர நான்காவது மரகதத்தை அபகரிப்பதற்கு நீ முயற்சிசெய்துகொண்டிருந்ததை நான் பாராதவனா?" என்று மறுபடியும் கோபத்துடனுரைத்தேன்.

"என்னாற் பொறுக்க முடியாதபடி வேண்டிய வசைமொழிகளைக் கூறிவிட்டீர்கள். இனிமேல் ஒருக்கணமும் இதைத் தாங்க முடியாது. என்னை அவமதிப்புக்குள்ளாக்க வேண்டுமென்று நீங்கள் தீர்மானித்துவிட்டீர்களாதலால், உங்களுடன் இனிமேல் ஒரு வார்த்தைகூட உரையாட முடியாது. நாளைக்காலை இந்த வீட்டைவிட்டு நான் வெளியே சென்றுவிடுகிறேன். இந்த உலகத்தில் வயிறு பட்டினிகிடவாது", என்று என்னைக் காட்டிலும் பலமடங்கு கோபத்துடன் கூறினான்.

"ஓஹோ! நீ தான் சமர்த்தனோ? உன்னை போலீசர் வசம் ஒப்புவித்துவிடுகிறேன். இந்த அயோக்கியத்தனமான உனது நடத்தையின் காரணத்தை அறிந்து கொள்ளாமல் நான் விடமாட்டேன்", என்று நானுரைத்தேன்.

எனது கோபமும் கூக்குரலும் அதிகரித்தது வீடு அல்லோலகலப்பட்டது. பணிமக்கள் யாவரும் கண் விழித்துக்கொண்டனர், நாங்கள் போர்புரிந்து கொண்டிருக்கும் அறைக்குள் சாரதாவே முதன் முதலாக நுழைந்தாள், மரகதக் கிரீடத்தையும், ரங்கசாமியின் கலவரப்பட்ட வதனத்தையும். எனது கோபத்தீ பறக்கும் கண்களையும் உற்று நோக்கியதும், நடந்த விஷயம் முழுவதையும் சாரதா ஊகித்துக்கொண்டாள். அவள் வீரென்று கூச்சலிட்டாள். ஒரு வேலைக்காரனை அழைத்து போலீஸ் ஸ்டேஷனுக்கு செய்தி சொல்லி அனுப்பினேன். இருபது நிமிடங்களில் இன்ஸ்பெக்டர் பொன்னுரங்க முதலியாரும் சில ஜவான்களும் வந்து சேர்ந்தனர். அச்சமயம் தன்னைக் கைது செய்யும்படி போலீசாருக்கு நான் தெரிவிக்கப்போகிறேனோவென்று ரங்கசாமி கேட்டான் இதுவரை பரமரகசியமாக இருந்த விஷயம் பெரிய பிரமாதமான கொள்ளையாக மாறிவிட்டபடியால், சட்டப்படி நடப்பதே நலமென்று எனக்குத் தோன்றுகின்றதென்றேன்.

"இன்றிரவு என்னைக் கைதியாக்காமல், இப்பொழுது நான் வெளியே சென்றுவருவதற்கு 15 நிமிட நேரம் அளிப்பீர்களானால், உங்களுக்கும் எனக்கும் அது அனுகூலமாகவிருக்கும்" என்றான்.

"அதற்குள் கொள்ளையடித்த மரகதங்களை எங்கேயாவது பத்திரபடுத்திவிட்டு வரவா", என்றேன்.

அப்பொழுது என்னைச்சுற்றியிருக்கும் பயங்கரமான நிலைமையை உத்தேசித்து, எனது நற்பெயருக்கும், குலத்தின் நற்புகழுக்கும், வியாபாரத்தின் அழியாத கீர்த்திக்கும் ஏற்படக்கூடிய பழியையும் அபவாதத்தையும் சிறிது நேரம் யோசிக்கும்படி அவனிடங் கூறினேன் அதுமட்டுமல்லாமல் ஓர் சமஸ்தானாதிபதியின் செய்கை —இம்மாதிரியான, பணத்துக்காக பரம்பரையால் குலத்தில் இருந்த கிரீடத்தை அடகுவைப்பது—நாலுஜனங்களின் செவிகளுக்கு எட்டுமானால், அவருடைய ஹிருதயம் எவ்வாறிருக்குமென்றும் யோசிக்கும்படி வேண்டிக்கொண்டேன், எப்படியாவது காணமற்போன

மாகதங்கள் எங்கு, எந்நிலைமையில், யாருடன் இருக்கின்றன வென்பதைத் தெரிவிக்கும்படி பலதடவை அவனிடம் பற்களைக்காட்டிக் கெஞ்சினேன்.

"என்னிடம் எவ்வளவு கெட்டிக்காரத்தனமாய்வேண்டுமென்றாலும் பேசலாம். கொள்ளைசெய்து கொண்டிருந்த பொழுதே கையுங் களவுமாய் உன்னைப் பிடித்துவிட்டேன். என்னதான் சமத்காரமாகவும், சாமர்த்தியமாகவும், தந்திரமாகவும், நயந்தும், சிரித்தும் பேசினாலும் உன்னுடைய குற்றம் மறைந்துபோகாது. எனது கையில் விஷபம் இருக்கும் வரையில், மாகதங்களின் கதி என்னவாயிற்றென்றுரைத்தால் உன்னை மன்னிப்பேன். இவ்விஷயத்தையும் மறந்துவிடுவேன்." என்றேன்.

"உங்களிடம் பணிந்து கேட்பவர்களை மன்னியுங்கள்." என்று கூறிவிட்டு வேறுபக்கம் நோக்கித் திரும்பினான்.

எனது வார்த்தைகள் அதற்குப்பிறகு அவன் செவியில் நுழையாதென்பதை உணர்ந்து கொண்டேன். அதற்குப்பிறகு எனக்கு ஒருவழிதான் தோன்றியது. பொன்னுரங்க முதலியாரிடம் நடந்ததைக்கூறி எனது மைந்தனையும் அவரிடம் ஒப்புவிப்பதே சிறந்தவழியென்று தோன்றிற்று. அவ்வாறே செய்தேன். ஓர் சோதனை ஆரம்பமாகியது. அவனை மட்டுமல்ல, அவனுடைய அறையையும் இன்ஸ்பெக்டர் சோதித்தார். இதைத்தவிர மாகதங்களை ஒளித்து வைக்கக்கூடிய வீட்டின் எல்லாப்பாகங்களையும் சோதித்தார். மாகதங்களைப்பற்றிய அடையாளமே தெரியவில்லை. ரங்கசாமியோ, இன்ஸ்பெக்டரின் நயமொழிகளுக்கும், ஜவான்களின் மிரட்டுதலுக்கும், வாய் திறக்கவில்லை. இன்று காலை அவனைச் சிறைச்சாலைக்கு இட்டுச்சென்றனர். போலீசாரின் கேள்விகளுக்கெல்லாம் நான் சரியான ஜவாபு சொல்லிவிட்டு, பொன்னுரங்க முதலியாரின் யோசனையின்பேரிலும் தூண்டுதலின் பேரிலும், துப்பறியும் நிபுணராகிய உங்களைத் தேடி வந்திருக்கின்றேன். நீங்கள் தான் இம்மாயத்தைத் துலக்கவேண்டும். எனது புகழையும், மாகதங்களையும், மைந்தனையும் ஓர் இரவில் இழந்தேன். எனக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை.

என்று நாராயணசாமி நாயுடு தனது கதையை சுருக்கமாகவும், விஷயங்களைத் தெளிவாயும் எடுத்துரைத்தார் அவருடைய நெற்றியினின்றும் வியர்வை குபீர் குபீரென்று வெள்ளப் பெருக்கு எடுத்துக்கொண்டிருந்தது. தனது கரங்களை சட்டைப் யில் போட்டும் வெளியே எடுத்தும் நெருப்பிலகப்பட்ட புழுப்போல் அவர் துடித்தார். துப்பறியும் நிபுணர்கள் திகைத்துவிட்டனர்.

கஜபதிசிங் இமைகொட்டாமல் நாராயணசாமி நாயுடுவின் கதையை ஆழ்ந்த சிந்தனையுடன் கவனித்துக்கொண்டிருந்தார். நாயுடுவின் 'ராமாயணம்' முடிந்த பிறகுங்கூட கஜபதி வாய்திறக்கவில்லை. அப்போதைக்கப்போது சுருங்கும் அவருடைய நெற்றியிலிருந்து அவருடைய தீர்க்காலோசனையின் நன்மையை நாயுடு ஊகித்துக்கொண்டார். திடீரென்று கஜபதி வாய்திறந்தார்.

கஜபதிசிங்:—உங்களுக்கு அதிகநட்பாளர்கள் கிடையாதோ?

நாருயணசாமிநாயுடு:— இல்லையென்றே சொல்லவேண்டும். எனது பங்காளி கோவிந்தசாமி நாயுடுவும், அவருடைய மனைவியும், புத்திரியும் சிலசமயங்களில் எனது வீட்டுக்கு வருவதுண்டு. ரங்கசாமியின் நண்பன் வரதராஜன் சமீபகாலமாக நாள் தோறும் எனது வீட்டுக்கு வந்து சென்று கொண்டிருந்தான்.

கஜபதிசிங்:— நீங்கள் நண்பர்களை நாடிச்செல்வதுண்டா?

நாராயணசாமிநாயுடு:— கிடையாது. சாரதாவும் நானும் எப்பொழுதும் வீட்டிலேயே இருப்போம். வெளியே செல்வது கிடையாது. ரங்கசாமி மாத்திரம் எப்பொழுதும் வீட்டைவிட்டு வெளியே இருப்பான். அவனுக்கு அளவிறந்த நண்பர்களிருக்கின்றனர்.

கஜபதிசிங்:— இளம் பெண்களை வீட்டினுள்ளே அடைத்து வைத்திருப்பது நாகரீகத்தின் அழகல்ல.

நாராயணசாமிநாயுடு:— அவள் சாந்தம், பொறுமை முதலிய நற்குணம் படைத்த நாரீமணி. மேலும் அவள் சிறுபெண்ணல்ல. 18 வயதுள்ள பெண்கள் வெளியே தனிமையாகச் சென்றுவருவதற்கு இடங்கொடுக்கும் இந்த நாகரீகத்தைக் கண்டிக்கிறேன்.

கஜபதிசிங்:— நீங்கள் கூறுவதிலிருந்து மரகதக்களவானது சாரதாவின் ஹிருதயத்தைப்பிளந்துவிட்டதென்றே நினைக்கின்றேன்

நாராயணசாமிநாயுடு: — அதற்கென்ன சந்தேகம். என்னைக் காட்டிலும் அவள்தான் அதிகமாய்க் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாள்.

கஜபதிசிங்:— ரங்கசாமியின்மீது சாற்றப்பட்டுள்ள குற்றத்தைப்பற்றி உங்களிருவருக்கும் சந்தேகங்கிடையாதே?

நாராயணசாமிநாயுடு:— எவ்வாறிருக்கமுடியும், கையுங்களவுமாக அவனைப் பிடித்தபிறகுமா சந்தேகம் இருக்கும்!

கஜபதிசிங்:— அது ஒரு ருசிகரமான காரணமல்லவென்றே நினைக்கின்றேன். கிரீடத்தின் மற்றப்பாகங்கள் சேதப்படவில்லையே?

நாராயணசாமிநாயுடு:- அதிகமாகச் சேதப்படவில்லை. ஆனால் கொஞ்சம் நீட்டப்பட்டிருக்கின்றது. தன்மீது குற்றமில்லையானால் என்னிடம் ரங்கசாமி அவ்வாறு ஏன் சொல்லியிருக்கக்கூடாது?

கஜபதிசிங்:— உண்மைதான். ஆனால், அவன் குற்றவாளியாக இருந்தால் ஏன் பொய்க்கதை கட்டியிருக்கக்கூடாது? அவனது மௌனம் இரண்டு பக்கங்களுக்கும் உதவுகின்றது. இந்த மர்மத்தைப்பற்றிய செய்திகள் ஆச்சரியமானவைகளாக இருக்கின்றன நீங்கள் கண்விழிப்பதற்குக் காரணமாயிருந்த சத்தம் எவ்வாறுஉண்டாயிருக்கக் கூடுமென்று போலீசார் நினைக்கின்றனர்?

நாராயணசாமிநாயுடு:— தனது படுக்கையறையின் கதவைச் சாற்றும்பொழுது அச் சத்தம் ஏற்பட்டிருக்கலாமென நினைக்கின்றனர்.

கஜபதிசிங்;— சாதகமான கட்டுக்கதை, களவாட வந்திருக்கும் ஒருவன் வீட்டு மனிதர்களைச் சத்தஞ்செய்து எழுப்புவானென்று போலீசார் நினைக்கின்றார்போலும். மாகதங்கள் காணமற் போனதற்கு அவர்கள் என்ன காரணங் கூறுகின்றனர்?

நாராயணசாமிநாயுடு:— வீட்டிலுள்ள நாற்காலி மேஜைகளையும், சுவர் ஓடு முதலியவைகளையும் இன்னுமவர்கள் சோதனை போட்டுக்கொண்டிருக்கின்றனர்.

கஜபதிசிங்:— வீட்டைவிட்டு வெளியே சென்று தேடினார்களா?

நாராயணசாமிநாயுடு:— ஆம் போலீசார் அதிக ஊக்கங் காட்டுகின்றனர் இது விஷயமாக, வீட்டுத்தோட்டம் முழுவதையும் சோதனை செய்தாய்விட்டது.

கஜபதிசிங்:— நீங்களாவது போலீசாராவது இம்மாயக் களவைப்பற்றி முதலில் நினைத்ததைக் காட்டிலும் நான் அதிகக் கவலையுடன் எண்ணிப்பார்க்கின்றேன். இவ்விஷயம் எனது முழுக் கவனத்தையும் கவருமென்பதற்கு ஐயம் வேண்டாம். உங்களுக்கு இது ஒரு சாதாரண விஷயமாகத் தோன்றுகின்றது. எனக்கு மிகவும் சிக்கலான விஷயமாகத் தென்படுகின்றது. உங்களுடைய முடிவைக் கவனித்துப் பாருங்கள். படுக்கையினின்றும் எழுந்திருந்து, மிகுந்த துணிவின்பேரில் உங்களுடைய அறைக்குள் நுழைந்து பெட்டியைத் திறந்து, மரகதக் கிரீடத்தை வெளியிலெடுத்து, மனித பலத்தினால் கிரீடத்தின் ஒரு மூலையை பின்னப்படுத்தி மூன்று மரகதங்களை கொள்ளையடித்து, மிகவும் பத்திரமான ஓரிடஞ்சென்று அவைகளை மறைத்துவைத்து, திரும்பவும் கிரீடத்துடன் அந்த அரைக்கு வந்து, சத்தமுண்டாக்கி, ரங்கசாமி உங்கள் காத்தில் கையுங் களவுமாய் அகப்பட்டிருக்கிறான். இது எம்மட்டும் உண்மையாக இருக்கக்கூடுமென்பதை நீங்களே அறிந்துகொள்ளுங்கள்.

நாராயணசாமி நாயுடு;— இதைத்தவிர வேறு முடிவிற்கு வருவது எவ்வாறு? அவன் உண்மையில் நிரபராதியாக இருந்தால் நடந்தவைகளை ஏன் உரைக்கக்கூடாது?

கஜபதிசிங்:— அபராதியைக் கண்டுபிடிப்பது எங்கள் வேலை. உங்களுக்கு விருப்பமிருக்குமானால் நாங்களும் மைலாப்பூருக்கு வருகின்றோம்.

சிலநிமிடங்கள் மோட்டாரில் பிரயாணஞ்செய்தது அவர்களை மைலாப்பூர் ரத்ன விலாசத்திற்குக் கொண்டுவந்தது. ரத்ன விலாசம் விசாலம் பொருந்திய ஓர் பெரிய பங்களா. வீட்டைச் சுற்றி அழகான மரங்களடர்ந்த தோட்டம் காணப்பட்டது. பங்களாவின் முன்புறத்தில் சதுரமான பெரிய புல்வெளி அழகாகக்கிடந்தது. வீதியிலிருந்து பங்களாவிற்குள் வண்டி மோட்டார் முதலியவை வருவதற்கென்று ஓர் பாதைவிடப் பட்டிருந்தது. புற்தரைக்கு வலது பக்கம் வீதிவழியாய் வீதியிலிருந்து சமயலறைக்குச் செல்லக்கூடிய பாதையொன்று, அடர்ந்து பரந்து கிடக்கும் புதர்களுடனிருந்தது. புற்தரைக்கு இடது புறத்தில் ஓர் பாதை குதிரை லாயத்தையும் வீதியையும் இணைத்துக்கொண்டிருந்தது. இப்பாதை வழியாய் சாதாரண ஜனங்களும் போய்வந்து கொண்டிருந்தார்கள். அம்மூவரும் ரத்னவிலாசத்தையடைந்து, நாராயணசாமிநாயுடுவையும்வேணுவையும் பங்களாவின் வாசலில் நிறுத்திவிட்டு, வீட்டின் நாற்புறத்தையும் சுற்றிப்பார்த்து, புற்தரைக்கு இருபக்கத்திலுமுள்ள பாதைகளின் வழியாய் பின்புறத்தோட்டத்திற்குள்சென்று, குதிரைலாயத்தைப் பார்வையிட்டார். நாராயணசாமி நாயுடுவும் வேணுவும் கூடத்திற்கு போய் ஆசனங்களில் அமர்ந்துகொண்டு கஜபதிசிங்கின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். துப்பர் சிங்கம் வருவதற்கு 30 நிமிடநேரம் பிடித்தது, அம்மூவரும் —கஜபதிசிங் வந்துவிட்டார்— ஆசனங்களிலிருந்த வண்ணமாய்ச் சிறிது சிற்றுண்டி அருந்தினர். அச்சமயம் அழகுதிரண்டு ஓர் அணங்கு தோன்றினாள். அதிக உயரமும், அதிகக்குட்டையுமில்லாத தோற்றங்கொண்டவள், மெலிந்திருந்தாலும் அழகான தேகக்கட்டுடையவள், சுருண்டு நீண்டு அடர்ந்த கூந்தலுடையவள், அறிவைப் புலப்படுத்தும் சக்திவாய்ந்த கூரியவிழியுடையாள், சந்திரபிம்பம்போன்ற வதனமுடையாள். இத்தகைய இயற்கை எழிலை முற்றிலும் அடையப்பெற்றிருந்தாலும் அவளது வதனம் வெளுத்திருந்தது, அதரங்கள் தண்ணீரின்றிவரண்டு கிடந்தன, கேசங்களில் செந்நிறம் பிரகாசித்தது இயற்கைத் தோற்றத்துக்கு மாறுபாடாகக் காணப்படும் இவ்வடையாளங்கள் கஜபதி

சிங்கின் நேத்திரங்களுக்கு விருந்தாயின. அவளைப்பார்த்ததும் கஜ பதியின் புருவங்கள் நிமிர்ந்து நின்றன. அப்பைந்தொடி அன்ன நடை நடந்து நாராயணசாமி நாயுடுவின் பக்கத்தில் வந்தமர்ந்தாள் நாயுடுவின் கரத்தைப்பிடித்துக்கொண்டு,'' மாமா! ரங்கசாமியை வெளியே விடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டீர் களா'' என்று கவலைகொண்டவள் போன்று வினவினள்.

நாராயணசாமிநாயுடு:— முடியாது. இவ்விஷயத்தைத் துலக்காவிட்டால் நான் வியாபாரஞ்செய்வது என்ன பலனளிக்கும்? சாரதா ! நீ கவலைப்படாதே.

சாரதா:— மாமா! ரங்கசாமி குற்றவாளியல்லவென்பது எனக்குத் தீர்மானமாகத் தெரியும். பெண்களின் பகுத்தறிவு எத் தன்மையானதென்பதை நீங்கள் அறிவீர்கள். மாகதக் கிரீடத்துக்கு ரங்கசாமி ஒரு விதத் தீங்கும் இழைக்கவில்லை. இவ்வாறு அநியாய மாய் அவனை இப்பொழுது சிறையிலடைத்திருப்பதற்குப் பிறகு வருந்துவீர்கள்,

நாராயணசாமிநாயுடு:— அவன் குற்றமிழைத்திராவிட்டால் எதற்காக வாயை மூடிக்கொண்டிருக்கின்றான்?

சாரதா:— யாருக்குத் தெரியும்? உங்கள்மீது ஒருக்கால் கோபங்கொண்டிருக்கலாம். திடீரென்று அவன் மீது நீங்கள் சந் தேகப்படலாமா?

நாராயணசாமிநாயுடு:— என் கண்களினால் அவனுடைய அயோக்கியச் செய்கையை தரிசித்த பிறகுமா அவன்மீது சந்தேகிக் காமலிருப்பேன்?

(தொடரும்.)

2; பெரியாழ்வார் பிரபந்தம்.

(முன் 348-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

48 நீராடிங் கற்பனையா னியமத்தின் குறைமுடித்துங்
கூராழி சங்கங்கைக் கொண்டபிரான் றனைவணங்கிப்
பாரோரும் விண்ணோரும் பணிந்தேத்தப் பசுந்துளபத்
தாரோறு மெழிற்கூடை தாங்கிநந்த வனஞ்சார்ந்தும்.

வேறு.

49. சிலபகல் கடத்தினாச் செயல்கண்டு புதுவை மன்னும்
புலவர்களிவரை வாழ்த்திப் பூங்கழ லிறைஞ்ச வன்னார்
மலமறுத் திறைக்காட் செய்பு மகியளித் தவர்பான்மாறு
நலமரு ளாழி சங்க நற்பொற் நல்கி யாண்டார்.

50. எருடைத் தொண்டரோடு மிலங்கைசெற் றவற்கு நற்பூத்
தாருடன் சமைத்து மாயன் றாளிணை வணங்கு நாளிற்
பார்முழு தாளு நீதிப் பாண்டியர் குலத்திற் கொண்டு
சீர்பெற வவனிகாக்குஞ் சீவலதேவ னென்றோர்.

51. தென்னவன் மதுரை மன்னிச் சிறந்தர சாளுநாளின்
மன்னுமந் நகரிலுள்ள மாந்தர்கட் கரசாலெய்து
மின்னலு மிதமுங்காண வேண்டுமென் றிராக்காலத்தப்
பொன்னகர் வீதியெங்கு மொருவனாய்ப்போய்மீள்போதில்.

52. திருநகர் காவலாளர் செழுமணிப் பாரிபோட்டு
வருபவ ரெதிரே மன்ன மன்னவன் மறைந்தோர்நீதி
யருமறை யந்தணாளன் றிண்ணையின் மறைய வாங்கே
யொருவனோர் மூச்சனாகி யுறங்குவா னுயிர்ப்பக்கேட்டான்.

53. கேட்டமெய் நீதி மன்னன் கிளரொலிப் பாரிக்காரர்
கூட்டமவ் வீதி நீங்கக் குவலையந் தாங்குங்கையிற்
பூட்டிய வுடைவாளோடும் புகுந்ததி லுறங்கு கின்றான்
மாட்டணைந் திருந்தானார் கொலிவனென மனத்திலெண்ணி.

54. இருந்தமன் கிடந்தான்றன்னை யெழுப்பி நீ யாவனென்று
திருந்துமின் னுறைபாற் கூறத் திண்ணையிற் றுயில்கொள்வோ
னும்
வருந்துயில் யாவு நீங்கி மறையவ னொரு நானென்
றருந்தவன் கூறமன்ன னவனொடு மற்றவதானன்.

55. வேதியர் குலத்து ளீரேல் வெறுமையுற்றிவணந் தஞ்சு
நீதியே தறைக வென்றான் மன்னவனெறி நின்றோங்கு
மூதிய மறிந்த பார்ப்பா னுரைப்பனன் கங்கை யாடி
யாதியெம் பிராமசேது வாடுவே னணைந்தேனையா.

56. என்றவனுரைப்பக் கேட்டாங் கிருநில முழுது மாளும்
வென்றிவேல் வேந்தனந்த வேதியன் றன்னை நோக்கி
நன்றிசேர் கதைகள் போமென வில்கவென் றறையப் பார்ப்பா
னென்று நானறியேனையா வுளதொரு கிரந்தமென்றான்.

57. ஆங்கதை யருளு வீரென் றரசனு முவந்து கூற
வோங்குசீ ரந்தணாள னுரைத்தன னுரைப்பவையந்
தாங்கிய மன்னர் மன்னன் சாற்றுவீர் பயனையென்றான்
மூங்கரு மறியும்வண்ண மொழிந்தனன் றெளிந்தசொல்லால்.

58. மாரியின் காலந் துய்ப்பான் மற்றுள காலத் தீட்டுங்
கூரிய விருளிற் றுய்ப்பான் கொழுஞ்சுடர்ப் பகலினீட்டுஞ்
சீரிய விளமை தன்னின் மூப்புக்குஞ் சிறப்பாலீட்டு
மேரியல் பதனுளிம்மை தன்னிலே மறுமைக் கீட்டும்.

59. என்பதை யாயன் கேட்டாங் கிரங்கி நைந் துருகி யந்த
வன்பனை யுடன் கொண்டேகி யளவறு நிதிய மீந்து
புன்புல னற்றுயேகென்றனுப்பியப் பொழுதே தானுந்
தன்பெருங் கோயில் புக்கான் றடமணி வயிரத் தோளான்.

வேறு.

60. வந்துமனை புக்கபுவி மன்னவர்கள் மன்ன
னந்தண னுரைத்தபொரு ளாய்வுறமெய் நாவின்
முந்தவரு மொன்றுட னிரண்டுமுடி வெய்து
மெந்தவகை யான் மறுமை யெய்துமென வெண்ணி.

61. இருந்தன னிருந்துழி யிருட்பொழுது மாயா
வருந்துயரு மாயவெழி லாதவ னெழுந்தான்
றிருந்துநியமத் தொழில்கள் செய்துமறை வாழ்வைத்
தருந்தவர்கள் கொள்வபல தானமு மளித்தே.

62. அண்டமுக டூடுருவி யாசற நிமிர்க்க
மண்டல மிலங்குமணி வாயிலுற மன்ன
னெண்டரு திசைப்புவியின் மன்னவ ரிறைஞ்சத்
தண்டரள மார்பனுபர் தானையர் வணங்க.

63. எய்தியரி யாசனம தெய்திவிட ரற்ற
வைதிகர்க ளாசினொடு மன்னவெழின் மன்ன
னுய்திற மறிந்திடு முபாயமவை யெண்ணிச்
செய்திற மறந்துவளர் தென்னவ னிருந்தான்.

வேறு.

64. பூங்கழற்கால் விறற்றென்னன் புக்கிருக்கு மவையின்க
ணாங்கவற்குப் புரோகிதனு மச்சுதன் சீரருள் வடிவைத்
தாங்குமெழின் மனத்தினனாய்ப் தத்துவனைப் பிரியாதே
யோங்குமடி யவராலும் பழவடியா னெனுமுறையில்.

65. உற்றவனாய்த் தென்னவனுங் குயிர்த்துணையா யறமன்றி
மற்றறியா நிலையானாய் மறைநாலுங் கற்றவனாய்
செற்றமிலா மனத்தினனாய் செல்வநம்பி யெனுநாமம்
பெற்றவனா யெதுவரினும் போகாத நிலையானாய்.

66. உளனொருவ னவன்வந்திட் டோங்கியசீர்த் தென்னவன்முன்
னளவிறந்த மகிழ்ச்சியொடு மணிந்தருகோ ராசனத்திற்
றுளவநெடு மணிமுடிமா றோத்திரம்வாக் கேத்தவஞ்சா
வளவனுக்குஞ் சோனுக்கு மன்னவவாழ் கெனவிருந்தான்.

67. பொய்மையற்ற மறையோனைப் பூபால னுறநோக்கி
மைமையெனும் புலைச்சமைய மயக்கிடையிற் படாதடியே
னிம்மையிலே மறுமைதனக் கியற்றுவதைப் படிபொன்று
மெய்மையைநா னடையுநெறி செல்வநம்பி விளம்புகென்றான்.

வேறு.

68. முத்திசித் திக்குமாறு மொழிகென மன்னன்கூறு
மத்திரு மொழிகேட்டுள்ளத் தந்தணனன்புகூர்ந்து
தத்துவமறிய வேண்டு மன்னவர் தலைவ வென்றான்
மெய்த்திற மருள்வார் யாரென் றாசன்வே தியனைக் கேட்டான்.

69. படிமுழு தாளுஞ் செல்வம் புன்னுனிப் பனியென் றெண்ணி
முடிவிலாப் பேரா னந்த முத்திநீ விரும்ப லாலே
விடிவிலா மாயா கங்குல் விடியும்வீ டெய்தக் காட்டு
மடிகள்வே தாந்தம் போனோ ரருள்வர்நீ யஞ்சலென்றான்.

70. வேதியனஞ்சலென்ற மெய்மொழி விளக்கங்கேட்டுப்
பூதல முழுது மாளும் புண்ணியன் மகிழ்ச்சி தாங்கி
யோதுமெய் வேத வாண ருறைவதெத் தலத்தி லன்னோர்
பாத தாமரைக னான்போய்ப் பணிவனீ பகர்வா யென்ன.

71. மன்னவர் பெருமான்கூற மாசறு செல்வ நம்பி
யென்னுமம் மெய்ம்மை யாள னியம்புவா னிலங்கு நீதித்
தென்னவ பூமி யெங்குந் திரிந்துநாங் காண்போ மென்றா
லன்னவர் வெளிவா ராரோ ருபாயமிட் டழைப்போமென்றான்.

72. சென்றுநாந் தேடி யாடுந் தீர்த்தரின் னன்பினாலே
யின்றெனிலாடி யுய் யென் றெனக்குமீண் டெய்து மாகி
லொன்றதி னுறுதி யுண்டோ வுரைத்தி யவ் வுபாய மென்றா
னன்றுகே ளென்று செல்வ நம்பியு நவில லுற்றான்.

73. ஆதியம் பரமன் மாயா வினோதத்தா லனந்த கோடி
நீதிகொள் சமைய மாக்கி நின்றன னதிற்ற னொன்றா
யோதிய சமையத் துள்ளோ ரொன்றை யொன்றொவ்வா
தென்பர்
வேதமு மவணாஞ்சொல்ல விதித்தவம் மெய்ம்மையாளன்.

74 அத்திரு வேத நீதிச் சிரத்தினி லமரு மந்த
மெய்த்தவ னிலையைத் தாங்கும் வேதமு மறியமாட்டா
வுத்தம குணத்தினானே யோங்கிய பரம சோதிச்
சித்திர வருள்பெற் றோங்குந் திறத்தினார் தெளியக் காண்பர்.

(தொடரும்.)